# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2054/54 - 2018 ජනවාරි මස 19 වැනි සිකුරාදා - 2018.01.19

*2054/54 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 76அ ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படுகின்ற அறிவித்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் 104ஆ (1) ஆம் உறுப்புரைக்கமைய சுதந்திரமானதும் மற்றும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் தேர்தல் ஆணைக்குழு நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதாலும், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 76அ ஆம் பிரிவிற்கமைய தேர்தலை நடாத்துவதிலுள்ள தடைகளை நீக்கிக் கொள்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் பணிப்புக்களை விதிக்க முடியுமென்பதாலும் தேர்தல் ஆணைக்குழுவினால் கீழே காட்டப்பட்டுள்ள பணிப்புக்கள், விதிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

**1. வாக்கெடுப்பு நிலையத்தினுள் புகைப்படமெடுத்தல் மற்றும் காணொளிப்படுத்தல்**

அஞ்சல் வாக்கு அடையாளமிடும் இடங்களினுள் அல்லது வாக்கெடுப்பு நிலையத்தினுள் வாக்களிக்கும் சந்தர்ப்பங்களை அல்லது அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களை புகைப்படமெடுத்தல், காணொளிப்படுத்தல் மற்றும் வாக்களிப்பதை அல்லது அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்களின் புகைப்படங்களை அச்சு, இலத்திரனியல் அல்லது சமூக வலைத்தளங்கள் போன்ற எந்தவோர் ஊடகத்தினூடாகவும் வெளியிடுதல் அல்லது பகிரங்கப்படுத்தல் தடைசெய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

தேர்தலை நடாத்துவதுடன் தொடர்புடைய உத்தியோகபூர்வ அறிக்கைகள் மற்றும் புகைப்படங்களைச் சேகரிக்கும் பணிகளுக்காக வாக்கெடுப்பு நிலையமொன்றில் விசேட சந்தர்ப்பமொன்றை அல்லது வாக்கெடுப்பு நிலையங்களின் செயலொழுங்கு முறைகளைப் புகைப்படமெடுக்கும் அல்லது காணொளிப்படுத்தும் தேவைப்பாடொன்று இருப்பின், அதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் எழுத்து மூலமான அனுமதி வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| மஹிந்த தேசப்பிரிய, | என். ஜே. அபேசேகர, | எஸ். இரத்னஜீவன் எச். ஹூல், |
| தவிசாளர், | அங்கத்தவர், | அங்கத்தவர், |
| தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2018, சனவரி 19.

02-520


1A - PG 3910 — 157 (2018/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.